வேலைப்பட்டியலிலும் இடம் பெறவில்லை. எனவே அபிவிருத்தி வேலைகள், பிற சாலைகள் என்ற தலைப்பின்கீழ் எடுத்துச் செயலாற்ற வேண்டிவரும். திட்டகால வேலைப்பட்டியலில் இந்தச் சாலை அபிவிருத்தி வேலை இடம் பெறவில்லை. வருங்காலத்தில் தயாரிக்கப்படவிருக்கும் சாலை அபிவிருத்தித் திட்டங்களில் நிதிவசதியை அனுசரித்துத்தான் இதையும் சேர்த்து ஆவன செய்யவேண்டி வரும்.

Papanad-Sholankarai Bridge.

* 504 Q.—THIRU *N. DENNIS*: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Papanad-Sholankarai bridge in Thanjavur district is to be reconstructed; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) பாலத்தைப் புதுப்பிக்கும் வேலை முடிவடைந்து, போக்குவரத்திற்கு 29—4—1971 அன்று திறந்து விடப்பட்டுள்ளது.

நகராட்சிகளுக்கு நிதிக் குழுக்கள்

* 505 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிகளில் புதிதாக நிதிக் குழுக்கள் அமைத்திடக் கோரி தமிழ்நாடு அரசு நகராட்சிகளுக்கு தாக்கீது அனுப்பி உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: இவ்வாறு நிதிக் குழுக்கள் அமைக்கவேண்டுமென்று நகராட்சிகள் கோரிக்கைகள் விடுத்துள்ளனவா? அமையவிருக்கும் நிதிக் குழுக்களின் பணிகள் என்னவென்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சென்னையில் நடந்த தமிழக நகரவைத் தலைவர்கள் மற்றும் நகராட்சி ஆணையாளர்களின் கூட்டு மாநாட்டில் அப்போதைய உணவு-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தனது தலைமை உரையில், நகரவைகள் தங்கள் நிதிநிலையைக் கண்காணிக்கவும் நகராட்சிகளில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் வசதிகள் செய்யப்பட்டனவா என்பதைக் கண்காணிக்கவும் ஒரு நிதிக்குழு அமைத்திட வகை செய்யவும், அக்குழு நகரவையின் தலைவர், ஆணையர் மற்றும் நகரவையால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அங்கத்தினரைக் கொண்டதாக இருக்கலாம் என்ற கருத்தினைத் தெரிவித்தார். நகரவைகள் ஓர் குறிப்பிட்ட வேலையைச் செயல்படுத்த, சட்டத்தில் குறிப்பிடாத ஆலோசனைக் குழுக்களை 1920-ம் வருடத்திய தமிழக மாவட்ட நகராட்சி சட்டத்தின் 23-வது பிரிவின்படி அமைக்க வழியுண்டு. இப்பிரிவின்கீழ், நகரவைகள் மேலே குறிப்பிட்ட நிதிக்குழுக்களை அமைக்க கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறை 17—12—1970-ம் தேதிய அரசாணை எண் 2364-ல் நகரவைகளைக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன்படி நகரவைகள் நிதிக்குழுக்கள் அமைத்துள்ளன. இக்குழுக்களுக்கு நகரவைத் தலைவர் தலைவராக இருப்பார். அதில் ஆணையரும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினரும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.